**கவனிக்க.-** 2007.04.27 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1496 - 2007 මැයි 04 වැනි සිකුරාදා - 2007.05.04

1496 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு மே மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 323 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 324 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 320 | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனம் (நீக்கல்) சட்டமூலம் 2007, மாச்சு மாதம் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) ஹெவிஜ் நம்பிக்கைப் பொறுப்புச் சபை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2007, மாச்சு மாதம் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(iii) கம்பஹா விக்ரமாராச்சி ஆயுள்வேத போதனா வைத்தியசாலை (கைமாற்றல்) சட்டமூலம் 2007, மாச்சு மாதம் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, மே 11 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, ஏப்பிறல் 27 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# ஆய விற்பனையும் குத்தகையும்

## கல்பிட்டி பிரசே செயலகப் பிரிவில் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை – 2007/2008

(2007 ஆம் ஆண்டு யூலை மாதம் முதல் 2008 ஆம் ஆண்டு யூன் மாதம் வரை)

2007 ஆம் வருடம் யூலை மாதம் 1 ஆந் திகதி முதல் 2008 ஆம் வருடம் யூன் மாதம் 30 ஆந் திகதிவரையுள்ள 12 மாத காலத்திற்கு இத்துடன் இணைக்கப்பட்ட கள்ளுத்தவறணைகளில் சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் 1982 ஆம் வருடம் ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க கள்ளுத்தவறணை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கமைய ஏற்றுக்கொள்ளப்படும்.

2. எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிமைப்படிவங்களில் கேள்வியை சமர்ப்பிப்பதுடன் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணமாக கல்பிட்டி பிரதேச செயலகத்தில் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாக பொறியிடப்பட்ட உறையில் இட்டு இடதுபக்க மேல் மூலையில் பெயரும் இலக்கமும் பின்வருமாறு:- "................................ ஆம் இலக்க ........................................................ கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். 2007.05.11 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு முன்பு கல்பிட்டி பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திர பெட்டியயில் இடுதல் அல்லது பதிவுத் தபால் மூலம் மேற்குறிப்பிட்ட நேரம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982 ஆம் வருடம் ஓகத்து மாதம் 20 ஆந் திகதி 207 ஆம் இலக்க இலங்கைக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளைக் குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கமைவனவாக இடுதல் வேண்டும்.

5. 2007.05.11 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளுதல் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அந்நேரம் கேள்விப்பத்திர கோரிக்கைக்காரர்கள் இச் செயலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும். குறிப்பிட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாத கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை மீண்டும் 2007.05.25 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு இடம்பெறும்.

6. இது தொடர்பான மேலதிக விபரங்கள் கல்பிட்டிய பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

எம். கே. முஹைஸ்,
பிரதேச செயலாளர்,
கல்பிட்டி.

பிரதேச செயலகம்,
கல்பிட்டி,
2007.04.12.

**அட்டவணை**

| இல. | பிரிவு | எல்லை | தவறணை | கேள்விப்பத்திர முடிவுத் திகதியும் நேரமும் | கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|---|---|---|
| 1. | கல்பிட்டி | தளுவை | கள்ளு | 2007.05.11 மு. ப. 10.00 | ரூ. 1,000 |
| 2. | கல்பிட்டி | ஏத்தாளை | கள்ளு | 2007.05.11 மு. ப. 10.00 | ரூ. 1,000 |

5-05

---

## சிலாபம் பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை-2007/2008

2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2008 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு இத்துடன் இணைந்துள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகள் சில்லறையாக விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(2) எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவத்தில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன், கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணத்தைச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டும், விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

(3) கேள்விப்பத்திரங்கள் முறையாகப் பொறியிடப்பட்ட கடித உறையில் இட்டு, அதன் இடப்பக்கத்தில் தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் "............ இலக்கமுள்ள ............... கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிட்டு 2007.05.14 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு முன் சிலாபம் பிரதேச செயலகத்திலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுதல் வேண்டும் அல்லது மேற்குறித்த திகதி, நேரத்திற்கு முன் சிலாபம் பிரதேச செயலகத்திற்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

(4) கேள்விப்பத்திரங்கள் 1982, ஒகத்து 20 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய செய்யப்படல் வேண்டும்.

(5) 2007.05.14 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே சகல கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அவ்வேளை கேள்விப்பத்திர கோரிக்கைதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம்பெற்ற பிரதிநிதிகள் இச்செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

(6) மேற்குறிப்பிட்ட தினத்தில் விற்பனையாகாமல் தவறணைகள் ஏதுமிருப்பின் இவற்றுக்கான மீள் விற்பனை 2007.05.28 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைய நடைபெறும்.

(7) இது தொடர்பாக மேலதிக விபரங்கள் சிலாபம் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல. 032-2223205).

எஸ். ஷானிகா ரோஷனி,
உதவி பிரதேச செயலாளர்,
சிலாபம்.

பிரதேச செயலகம்,
சிலாபம்,

**அட்டவணை**

| இல. | பகுதி | கிராமம் | தவறணை கேள்விப்பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 1. | சிலாபம் ந. வட். இலக்கம் 2 | இச்சம்பிடிய | 2007.05.14 மு. ப. 10.00 | 2,000 |
| 2. | சிலாபம் ந. வட். இலக்கம் 3 | அலுத்வத்தை | 2007.05.14 மு. ப. 10.00 | 1,000 |
| 3. | பிடிகல கோரளை | ஒலிதலுவ | 2007.05.14 மு. ப. 10.00 | 250 |

5-46

---

## வென்னப்புவை பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத்தவறணை விற்பனையும் குத்தகை விற்பனையும் - 2007/2008

2007 ஆம் வருடம் யூலை மாதம் 01ஆந் திகதி தொடக்கம் 2008 ஆம் வருடம் யூன் மாதம் 30ஆந் திகதி வரையுள்ள காலத்திற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான விண்ணப்பப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன. தற்போது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்களுக்கும் 1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதி 207 ஆம் இலக்க கள்ளுத்தவறணை குத்தகைக்கு கொடுக்கப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் தயார் செய்யப்படல் வேண்டும்.

2. விண்ணப்பப்பத்திரங்கள் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய விண்ணப்பப்படிவங்களில் தயார் செய்யப்படல் வேண்டியதோடு, அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய வைப்புத் கொள்கைப் பணத்தை பிரதேச செயலகத்தில் செலுத்தியதிற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையின் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிப்பத்திரமும் இணைக்கப்படல் வேண்டும்.

3. விண்ணப்பப்பத்திரங்கள் இணைக்கப்படும் உறையின் இடது பக்கத்தில் " ...................... இலக்கமுள்ள ....................... கள்ளுத் தவறணைக்கான விண்ணப்பப்பத்திரம்" என கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி தவறணைக்கான இலக்கத்தையும் பெயரையும் குறிப்பிட்டு 2007, மே மாதம் 11 ஆந் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி மு. ப. 10.00 மணிக்கு முன் வென்னப்புவை பிரதேச செயலாளருக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982.08.20 ஆந் திகதி வெளியிடப்பட்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய இடுதல் வேண்டும்.

5. 2007.05.17 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் விண்ணப்பப்பத்திரங்கள் திறக்கப்படும். அச்சமயத்தில் விண்ணப்பக்காரர்கள் அனைவரும் வென்னப்புவை பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்ய இயலாத கள்ளுத் தவறணைகள் திரும்ப விற்பனை 2007.06.01 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு நடைபெறும். அன்றைய நாளும் விண்ணப்பங்கள் வர்த்தமானப்பத்திரிகையின்படி அமைதல் வேண்டும்.

7. இது பற்றிய மேலதிக விபரங்கள் வென்னப்புவை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எம். சீ. பெர்னாந்து,
பிரதேச செயலாளர்.
வென்னப்புவை.

**அட்டவணை**

| | பிரதேசம் | கிராமம் | கேள்விப் பத்திரம் ஏற்கும் நேரமும் இறுதித் திகதியும் | கேள்விப்பத்திரம் வைப்புத் தொகை ரூபா |
|---|---|---|---|---|
| 1. | வென்னப்புவை பிர. செ. பிரிவு | தம்பராவில் | 2007.05.17 காலை 10.00 மணிக்கு | 500 |
| 2. | வென்னப்புவை பிர. செ. பிரிவு | நஞ்சுண்டான்கரை | 2007.05.17 காலை 10.00 மணிக்கு | 250 |
| 3. | வென்னப்புவை பிர. செ. பிரிவு | வைக்கால் | 2007.05.17 காலை 10.00 மணிக்கு | 1,000 |
| 4. | வென்னப்புவை பிர. செ. பிரிவு | வொரலஸ்ஸ | 2007.05.17 காலை 10.00 மணிக்கு | 500 |
| 5. | வென்னப்புவை பிர. செ. பிரிவு | தும்மளதெனிய | 2007.05.17 காலை 10.00 மணிக்கு | 1,000 |
| 6. | வென்னப்புவை பிர. செ. பிரிவு | லுனுவில | 2007.05.17 காலை 10.00 மணிக்கு | 500 |
| 7. | வென்னப்புவை பிர. செ. பிரிவு | வென்னப்புவ | 2007.05.17 காலை 10.00 மணிக்கு | 2,000 |
| 8. | வென்னப்புவை பிர. செ. பிரிவு | ஊள்கிடியாவ | 2007.05.17 காலை 10.00 மணிக்கு | 500 |
| 9. | வென்னப்புவை பிர. செ. பிரிவு | நய்னபடம | 2007.05.17 காலை 10.00 மணிக்கு | 1,000 |

| தவறணை திறக்கப்படும் நேரம் | தவறணை மூடப்படும் நேரம் |
|---|---|
| மு. ப. 11.00 | பி. ப. 2. 00 |
| பி. ப. 5.00 | இரவு 8.00 |

5-47

---

**புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை விற்பனையும் குத்தகை விற்பனையும் 2007 / 2008**

(2007.07.01 ஆந் திகதி முதல் 2008.06.30ஆந் திகதி வரை)

2007 ஆம் ஆண்டு யூலை 01 ஆந் திகதி முதல் 2008 ஆம் ஆண்டு யூன்மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணையில் குறிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். தற்பொழுது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்களிலும் இருக்கும் பொது நிபந்தனைகளுக்கு அமைவாகவும்.

2. புத்தளம் பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய உரிய படிவங்களில் கேள்வியை சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விபரங்களுக்கு அமைய வைப்புக் கொள்கைப் பணமாக பிரதேசச் செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும், விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியான அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாக மெழுகிடப்பட்ட உறையிலிட்டு இடது பக்கத்தில் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு:-

"............................ கள்ளுத் தவறணைக்குரிய .................................... இலக்கமுள்ள கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்"

என குறிப்பிட்டு 2007.05.10 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக புத்தளம் பிரதேசச் செயலாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அல்லது மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் புத்தளம் பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்கள் பெட்டியினுள் இட வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982 ஓகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளைக் குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கமைய இருத்தல் வேண்டும்.

5. 2007.05.10 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப்பத்திர கோரிக்கைகாரர்கள் புத்தளம் பிரதேசச் செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. இது தொடர்பான மேலதிக விபரங்களை புத்தளம் பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஏ. ஸி. எம். நபீல்,
பிரதேச செயலாளர்,
புத்தளம்.

பிரதேச செயலகம்,
புத்தளம்.
2007.04.16.

**அட்டவணை**

| இலக்கம் செயலாளர் பிரிவு | கிராமம் | தவணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | தவறணை கேள்விப் பத்திரம் ஏற்கும் நேரமும் இறுதித் திகதியும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவு | சேனைக்குடியிருப்பு | காலை 11.00 பி. ப. 5.00 | பி. ப. 2.00 இரவு 8.00 | மு. ப. 10.00 மணி 2007.05.10 | 1000 0 |

5-69

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அட்டோர்ணித் தத்துவத்தை இல்லாதொழித்தல்

ஆஸ்த்திரியாவின் கார்ட்னேகாஸ்ஸே 8, 1030 வியன்னாவில் வசிக்கும் ரெமிஜியோ பலோனி ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மற்றும் இந்நாட்டு பொதுமக்களுக்கும் அறியத் தருவதாவது, என்னால் இல. 45/5, இரண்டாம் ஒழுங்கை, மாவில்மட வீதி, கண்டி, இலங்கை என்ற முகவரியில் வசிக்கும் மஹ்மூது லெப்பை முஹம்மது சப்ரி என்பவருக்கு 1999.05.07 ஆந் திகதியில் கண்டி பிரசித்த நொத்தாரிசு சேகு பரீத் முஹம்மது சவாஹிர் அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட பதிவிலக்கம் 1600க்குரிய, அட்டோர்னித் தத்துவம் 2007 பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட மஹ்முது லெப்பை முஹம்மது சப்ரி என்பவரால் இதன் பின்னர் "ஸ்மித் அன்ட் ஸ்மித்" பெயரினால் செய்யப்படும் எவ்விதமான வேலைகளுக்கும் நான் பொறுப்பில்லை என்பதையும் அறியத் தருகின்றேன்.

ரெமி ஜியோ பலோனி.

5- 43

## நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ஆம் அத்தியாயம்)

யாழ்ப்பாணம் 25 ஒட்டுமடம் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கனகரத்தினம் கணேசவேல் ஆகிய நான், தமிழ்மொழியில் நொத்தாரிசு ஆவதற்கு இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குரிய ஆயத்தங்கள் அனைத்தையும் செய்துள்ளேன் என்பதை நொத்தாரிசுமார் கட்டளைச் சட்டம் (107 ஆம் அத்தியாயம்) 7 ஆம் பிரிவு 'ஆ' பகுதிக்கமைவாக இவ் அறிவித்தலை வெளியிடுகின்றேன்.

க. கணேசவேல்,

25, ஒட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.

5- 52

## அட்டோர்ணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

நுகேகொடை, ஸ்டன்லி திலகரட்ன மாவத்தை, சித்திராணி மானெல் பெரேரா (விவாகத்துக்கு முன்பு விஜயவன்ச), கொழும்பு 9, கெட்டவலமுல்ல லேன் 127/6A இலக்கத்தைச் சேர்ந்த சீதா தீமந்த பத்தரமுல்ல, சர்குலர் வீதி, இல. 16, நிஹால் டீ சில்வா ஆகிய நாங்கள் அம்பலாங்கொடை பகிரங்க நொத்தாரிசு சந்திரலதா ஹேவாவசம் என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 1995, யூலை 18 ஆந் திகதியும் 3028 ஆம் இலக்கமும் கொண்ட தொடந்துவ அகதுடுவ வல்பிட்ட விதானகே ஆரியரட்ன என்பவரை எமது அட்டோர்ணியாக நியமனம் செய்த அட்டோர்ணி தத்துவத்தை 2007, ஏப்பிறல் 11 தொடக்கம் இரத்துச் செய்து செல்லுபடியாற்றதாக்குகின்றோம்.

சித்திராணி மானெல் பெரேரா (விவாகத்திற்கு முன் விஜயவன்ச) மற்றும் நிஹால் டீ சில்வா.

5-74

# ஏல விற்பனைகள்

## மக்கள் வங்கி– அளவ்வை கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருததப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

**அளவ்வை பிரதேச சபை எல்லைகளுக்குள் காணி ஏலவிற்பனை**

**வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், தம்பதெனிய ஹத்பத்துவ உடுகஹ தெற்கு கோரளை, அளவ்வை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பரமாஉள்ள என்ற கிராமத்தில் அமைந்துள்ள "பதிஞ்சி இன்னாவத்தை" என்றழைக்கப்படும் பதிஞ்சிஹிடினா வத்தை என்ற இன்னாவத்தை அல்லது ஹிடினாவத்தை" என்று பதியப்பட்டிருக்கும் காணிக்கு அளந்து தயாரிக்கப்பட்டுள்ள 1993.06.27 ஆந் திகதியுடைய 738 ஆம் இலக்க வரைபடத்தின் 04 ஆம் இலக்க காணியும் அதனுள் அமைந்துள்ள வீடு உட்பட அனைத்தும் அடங்கலாக.**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 18.4பே.)**

மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் 2007.06.20 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு குறிப்பிட்ட சொத்து அமைந்துள்ள இடத்தில் என்னால் பிரசித்த ஏல விற்பனை செய்யப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு.**–2003.12.19 ஆந் திகதிய இலங்கை அரசின் வர்த்தமானியையும் 2004.03.17 ஆந் திகதிய "த டெய்லி நியுஸ்", 2004.03.15 ஆந் திகதிய "தினமின" மற்றும் 2004.03.15 ஆந் திகதிய "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்குச் செல்லும் விதம்.**–அளவ்வை நகரத்திலிருந்து கிரிஉள்ள செல்லும் பாதையில் 2 கிலோ மீட்டர் அளவு சென்று பராஉள்ளையால் வலது பக்கம் திரும்பி பன்சலைப்பாதையில் 200 மீட்டர் அளவு சென்று கிரவல் பாதையில் 50 மீட்டர் அளவு சென்றவுடன் பாதையில் வலது பக்கமாக இந்த ஆதனம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**–ஏலவிற்பனையின் முடிவின் போது சொத்தை விலைக்கு வாங்கிய நபர் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு கொடுப்பனவை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் :–

(1) தாம் வாங்கிய விலையின் 10% த்தையும் ;
(2) உள்ளூராட்சி அதிகார சபையினதும், பிரதேச சபையினதும் 1% வரியையும் ;
(3) ஏலவிற்பனையாளரின் பங்காக ஏலவிற்பனை தொகையின் 2 1/2% கமிசனையும் ;
(4) எழுதுவினைஞர்களினதும் அறிவிப்பாளர்களினதும் கட்டணமாக ரூபா 500 ஐயும் ;
(5) விற்பனைச் செலவு மற்றும் ஏனைய செலவுகள் இருப்பின் அந்தப் பணத்தையும் ;
(6) விற்பனைச் சான்றிதலுக்கான முத்திரைக் கட்டணத்தையும் ;

விலைக்கு வாங்கிய பணத்தின் மிகுதி 90% வீத பங்குப் பணத்தை ஏலவிற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் குருநாகல் மக்கள் வங்கி பிரதேச பிரதான முகாமையாளரிடம் செலுத்தப்படல் வேண்டும். தொலைபேசி இல. : 037-2222453, பெக்ஸ் இல. : 037-2222338.

உரிமைப் பத்திரம் மேலதிக விபரங்களை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் பெற்றுக் கொள்ள முடியும்.

மேற்குறிப்பிட்டுள்ளபடி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறின் ஏற்கனவே செலுத்திய பணத்தின் 10% தையும் திருப்பிச் செலுத்தாமளிருக்கவும். மீண்டும் சொத்தை விற்பதற்கும் வங்கிக்கு உரிமையுண்டு.

டபிள்யூ. எம். ஐ. கல்லேலல்ல,
(சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர்,
உத்தரவுபெற்ற ஏலதாரர்,
மதிப்பீட்டாளர்,

இல. 28, "புதிய சட்டத்தரணிகள் கட்டிடத் தொகுதி,"
குமாரதுங்க மாவத்தை,
குருநாகல்.
தொலைபேசி இல. : 037-2220062

5-71

---

## கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் – காலி கோட்டை கிளை

ஆதனம் ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் இதன் கீழ் விபரிக்கப்பட்ட ஆதனம் அதே இடத்தில் என்னால் 2007 மே மாதம் 29 ஆந் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**ஆதனத்தின் விஸ்தீரணம்.**–தென் மாகாணம், காலி மாவட்டம், வெலபொட பத்து அம்பலன்கொடை பிரதேச சபை எல்லைக்குள் கொடகம கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் டி. பி. ஏ. த சில்வாவின் 3.04.2003 ஆந் திகதியுடைய வரைபடம் இல. 7167 இல் காண்பிக்கப்பட்ட தலுக்காகெல என்ற காணியின் பகுதிபடுத்திய காணி துண்டான லொட் A என்ற காணியின் விஸ்தீரணம் (3ஏ. 1றூ. 0பே.) மற்றும் இக்காணியில் அமைந்துள்ள கட்டிடம் எல்லாம் சேர்த்து.

மேற்படி கொடகம கிராமத்தில் அமைந்துள்ள தலுக்காகெல என்ற காணியின் நில அளவையாளர் டி. பி. ஏ. த சில்வாவின் 3.04.2003 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 7167 இல் காண்பிக்கப்பட்ட பகுதிபடுத்திய காணி துண்டான லொட் B என்ற இக்காணியின் விஸ்தீரணம் (1ஏ. 2றூ. 30பே.). கடன் எடுத்த காணியை ஈடுவைத்த வதுதுரகே சுனிதா நலன்தனி த சில்வா மற்றும் மாகொடகே நிமலசிரி மேற்படி காணிகளை கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்டிற்கு ஈடுவைக்கப்பட்டது.

**தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக**.- தயவு செய்து 2006.03.17 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் "லங்கா தீப", "த ஐலன்ட்" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் ஏலவிற்பனை விளம்பரத்துக்காக 2007.05.04 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் "திவயின", "த ஐலன்ட்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்திற்குச் செல்லும் விதம்**.-இக்கடுவை பஸ் நிலையத்தில் இருநது காலி-கொழும்பு பிரதான வீதியூடாக கொழும்பு பக்கமாக 4 மைல் தூரம் சென்று கரவ கிராமத்திற்கு வரவும். அதன் பிறகு வலது பக்கம் திரும்பி 2 மைல் தூரம் சென்று மீதியாகொட சந்திக்கு வந்து அதன் பிறகு வலது பக்கம் திரும்பி பிரதான வீதியூடாக 1 1/2 மைல் தூரம் சென்று அலுத்வல கிராமத்திற்கு வரவும். காணி இடது பக்கம் கிராமத்து பன்சல அருகில் முன்பாக அமைந்துள்ளது.

**கட்டணம் செலுத்தும் விதம்**.-ஏலவிற்பனையின் இறுதியில் உத்தேசக் கொள்வனவாளர் பின்வரும் கட்டணங்களை பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிக்கான விற்பனை வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணமான கொள்வனவு விலையின் 2 1/2%;
(4) விற்பனையின் பத்திரத்தை தயாரிப்பதற்கான நொத்தாரிசு கட்டணம் ரூபா 2000 ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(6) ஏலத்திற்காக விளம்பரச் செலவுகள் எல்லாம் சேர்த்து ;
(7) கொள்வனவு விலையின் மிகுதி 90% ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் , பிரதான அலுவலகத்தில் அல்லது காலி கோட்டை கிளையில் செலுத்த வேண்டும்.

உரித்து உறுதிகளையும் மற்றும் தொடர்பு ஆவணங்களை பின்வரும் இடத்தில் பெற முடியும் :-

"முகாமையாளர், கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட், இல. 22, ஆலயம் வீதி, கோட்டை, காலி. தொலைபேசி இல. : 091-2232223, 091-2234377, 091-2242771, பெக்ஸ் இல. : 091-2242770.

எல். பி. சேனநாயக்க, (ஜே. பீ.),
உத்தரவுபெற்ற ஏலதாரர்,
விலைமதிப்பிடுபவர், நீதிமன்ற
ஆணையாளர், (கொழும்பு மாவட்ட
வர்த்தக நீதிமன்றம் மற்றும் மேல்
மாகாணம், மற்றும் சிரேட்ட ஏலதாரர்),
அரசாங்க மற்றும் வர்த்தக
வங்கிகள்.

99. புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி/பெக்ஸ் இல. : 2445393.

5-85

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்**.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் "சுப்றீம் கோட்" புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் VI பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட விசேட வர்த்தமானி | 3,360.0 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|---|
| (அ) | I வது பகுதி | 31.00 | 5.00 |
| | II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) | I வது பிரிவு | 10.00 | 5.00 |
| | II வது பிரிவு | 12.00 | 5.00 |
| | III வது பிரிவு | 9.00 | 5.00 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், 32, லோட்ஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டுக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், 32, லோட்டஸ் வீதி, கொழும்பு 1** என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தா பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.-** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்** என்பதையும், **அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது** என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை-2007

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மே** | .. | வெள்ளி | 04.05.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.04.2007 |
| | | வெள்ளி | 11.05.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.04.2007 |
| | | வெள்ளி | 18.05.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.05.2007 |
| | | வெள்ளி | 25.05.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.05.2007 |
| **யூன்** | .. | வெள்ளி | 01.06.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.05.2007 |
| | | வெள்ளி | 08.06.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.05.2007 |
| | | வெள்ளி | 15.06.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.06.2007 |
| | | வெள்ளி | 22.06.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.06.2007 |
| | | வெள்ளி | 29.06.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.06.2007 |
| **யூலை** | .. | வெள்ளி | 06.07.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.06.2007 |
| | | வெள்ளி | 13.07.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.06.2007 |
| | | வெள்ளி | 20.07.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.07.2007 |
| | | வெள்ளி | 27.07.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.07.2007 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007, சனவரி 01.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.